# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 241/ந/2017

ஆணை எண். 274/2017

நாள் : 14/12/2017

திருமதி வீ. கண்ணம்மாள்,
மேட்டூர். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி.
– எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி எண்.96/258, பொன்னகர் குடியிருப்பில் வசிக்கும் திருமதி வீ. கண்ணம்மாள் அவர்களின் 06.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு 08.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 241/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனுவின் மீது கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சி எண்.96/258, பொன்னகர் குடியிருப்பில் வசிக்கும் திருமதி வீ. கண்ணம்மாள் என்பவர் தான் பணிபுரிந்த நகராட்சிகளிடமிருந்து தனக்கு வழங்கப்படவேண்டிய சேமநல நிதிக்கான வட்டித்தொகையை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தான் பணியாற்றிய நகராட்சி ஆணையர்களுக்கு தனது கோரிக்கைக் குறித்து முறையாக மனுச் செய்யவேண்டும். மனுதாரரின் கோரிக்கை மனுவினை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் ஏற்று, நடவடிக்கை மேற்கொள்வதில் தாமதப்படுத்துவது அல்லது விதிகளுக்கு மாறாக ஆணையிட்டது மற்றும் நெறிதவறிய நடவடிக்கை இருப்பதாகக் கண்டறியப்பட்டால் மட்டுமே உரிய படிவத்தில், தேவையான ஆதார ஆவணங்களுடன் ரூபாய் பத்து மதிப்பிலான நீதிமன்ற வில்லையை ஒட்டி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்யவேண்டும். எனவே, சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கக் கோரும் மனுக்களை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களுக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 14–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திருமதி வீ. கண்ணம்மாள்,
96/258, பொன்னகர்,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்